பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P.S.வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1. பொள்ளாச்சி. 25—10—51. விலை அரையணா. 8-பக்கம். வெற்றி

தமிழ் நாட்டின் தனிப்பெருந் தலைவர்.

பாட்டாளி மக்களின் பண்பறிந்தவர், ஊழியர்களின் உண்மை நண்பர்.

தீபாவளி மலர்.

ஸ்ரீ கே. காமராஜ்.

தமிழ்நாட்டின் தனிப்பெருந்தலைவர் மக்களின் செல்வாக்குப்பெற்ற ஒப்பற்ற தலைவர், நாட்டின் நலனுக்காக அல்லும் பகலும் பாடுபடுபவர். பாட்டாளி மக்களின் பண்பறிந்தவர். விவசாயி — தொழிலாளி விடுதலைக்குப்பாடுபடுபவர். காங்கிரஸின் லட்சியத்தைக் காப்பாற்ற உயிரையும் பணயம் வைக்கத்தயாராயுள்ள ஆயிரக்கணக்கான உத்தமவீரவாலிபர்களின் உன்னதத்தலைவர். தன்னலங் கருதாத தலைவர். விருப்பு வெறுப்பைப் பாராட்டாத தலைவர். ஊழியர்களின் உண்மை நண்பர், ஏழைகள்பால் இறக்கங் கொண்டவர் தமிழ்நாட்டின் பெருமையை நிலைநாட்டியவர். வடநாட்டவரும் பெருமைப் படும்படியாக ஒற்றுமையை நிலைநாட்டியவர். நாட்டின் நலனையே பிரதானமாகக்கருதி வருபவர். காலத்திற்கேற்ப, சமயசந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் காலமாறுதலை அனுசரித்து மக்களின் விருப்பத்தைத்தெரிந்து வேலைசெய்து வருபவர், ஒருவருண்டு என்றால் அவர்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் என்று யாரும் எளிதில் சொல்லிவிடுவார்கள்.

அவருக்குத் தற்சமயம் சுமார் வயது 50. ஏறக்குறைய 30—ஆண்டுகளாக நாட்டின் விடுதலைக்காக போராடிய காங்கிரஸ் மகாசபையின்கீழ் வேலைசெய்து வருகிறார். சென்ற சுதந்திரப்போராட்டங்களில் சுமார் 12—தடவை அன்னிய ஆட்சியின் அடக்குமுறைக்கு ஆளாகிசிறைசென்றுள்ளார். 1939—ம் ஆண்டுமுதல்நாளதுவரை தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டியின் தலைவராக இருந்துசேவைசெ... வருகிறார். மகாத்மாவின் அன்பிற்குப்... திரமானவர். சிறந்த காந்தீயவாதி. ச... தஉழைப்பாளி, சொந்த அலுவல்கள்... வுமின்றி முழுநேரத்தையும் காங்கிர...ற்கு செலவிட்டு வருபவர். பணமுட்... களை காங்கிரஸிற்குள் விடாது காங்... ஸைஏழைகளின்பக்கம் இழுத்துச்செ... பவர். நாட்டில் பணத்திற்கு மரியாதை... டையாது உழைப்பிற்குத்தான்மரியா... உண்டுஎன்றுவற்புறுத்திவருபவர். அ... இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி... ஒருதமிழன் மெம்பரானது இவர்கா...தில் இவர்தான். இரண்டு முறை காரி... கமிட்டி மெம்பராகியுள்ளார். தேர்தல்... லங்களில் இவரின் அலாதியான திறமை...யால்தான் காங்கிரஸின் வெற்றியும் ம...ளின் நம்பிக்கைக்குகந்த மந்திரிசபை... ஏற்படுகிறது. மக்கள் விரும்பாத எந்த... திரிசபையையும் வைத்திருக்க மாட்ட... மக்களின் விருப்பப்படி மாற்றி அமை...வும் தயங்கமாட்டார். இவரின்நேர்மைய... திறமையையும்ஒழுக்கத்தையும்எதிரிகள்...டப்பாராட்டுவார்கள். தனக்கென்று வி...ம்பாத உத்தமர். இவர் விரும்பி இரு...தால் எந்த உயர்ந்த பதவிக்கும் போயி...க்கமுடியும். காங்கிஸிற்கு சேவைசெய்...துதவிற வேறு எந்தப்பதவியையும் வி...ம்பாத இந்தஉத்தம ஊழியரை தலைவ...கப்பெற்றுள்ள தமிழ்நாட்டின் பாக்கியமேப...க்கியம். நடைபெறப்போகும் பொதுத்தே...லுக்கு காங்கிரஸ் அபேக்ஷகர்களை தேர்ந்தெ...க்கும் திருப்பணியில் தமதுமுழுக்கவனத்தை...யும்செலுத்தி நேர்மைமிக்கவர்களையே தே...தெடுத்துள்ளார். தமிழ்நாட்டில் ஊழியர்... அதிகப்பேரைத் தேர்ந்தெடுக்க முடியவில்...

(2-ம் பக்கம் பார்க்கவும்.)

நுகம் தாங்கிய காளைகளின் சின்னமுள்ள பெட்டிக்கே வோட் செய்யுங்கள்!

செல்வாக்கு மிருந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 25—10—51, வியாழன்.

தொழிற் சங்கம் உருப்படுமா?

வரும்தேர்தலில் காங்கிரஸ் அபேக்ஷக ளேயே ஆதரிப்பதென இந்திய தேசீய ாழிற்சங்க காங்கிரஸ் தீர்மானித்திருப் த நாம் பாராட்டுகிறோம். ஆனலதன் ளையான த. நா. தே. தொ.ச. காரிதரிசி ீ ஜி. ராமனுஜம் காங்கிரஸ் அபேட்சக ளே எதிர்த்து போட்டி யிடுவதென்று டிவுசெய்திருப்பதை நாம் வன்மையாக ண்டிக்கிறோம். அகில இந்திய ஸ்தாபன திற்கு விரோதமாக அதன் கிளை ஸ்தாப ம் நடவடிக்கைகளில் இறங்க அதற்கு ரிமையேகிடையாது. அதோடு த. நா. . கமிட்டி தலைவரே அதன் கிளைஸ்தாப த்திற்கும்தலைவராக இருக்கும்பொழுது ப்படி காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர் முடியும். காரியதரிசி என்றமுறையில் ங்கிரசையே எதிர்க்க முனைந்திருப்பது ச்சரியமாகஇருக்கிறது. இவரை சேர்ந் ருசிலருக்கு பதவிகிடைக்கவில்லைஎன் ற்காக தொழிற் சங்கத்தின் பேரால் ங்கிரஸை எதிர்க்க முனைவது சர்வாதி ரத்தனமாகும். அத்துடன் தொழில் ங்கங்களுக்கும் உலைவைப்பதாகமுடியும் கெனவேயே கம்யூனிஸ்ட்களும் சோ லிஸ்களும் இவர்களை பதவி வேட்டைக்கா ள் என்றுகூறிவருவதை ஊர்ஜிதம்கொள் ாகும் என்பதைஸ்ரீ ராமனுஜம்உணர்ந்து ந்துவார் என்று எதிர்பார்க்கிறோம். இந்த ் நீடித்தால் தொழிற்சங்கங்களும், தொ ற்சங்கவாதிகள் என்று சொல்லிக்கொள்ளு ர்களும் உருப்படுவார்களா?

இவருடைய போக்கை எந்ததொழிற்சங்க யும், எந்தத்தொழிலாளியும் ஆதரிக்க டார்கள் என்பதுதிண்ணம். இவருடைய க்கால் தொழிற்சங்கங்களுக்கு மாசுஏற்ப விட்டது என்றேநாம் கூறுவதுமட்டு ல் எல்லோரும் ஒருமனதுடன் ஒப்புக் கொள்ளுவார்கள். இவருடைய போக்கைகண்டிக்கும் வகையில் காங்கிரஸின்பால் நல்லெண்ணம்கொண்டதொழிலாளர்களும் "தொழிற்சங்கங்களும் இவரைக்கண்டித்து இ. தே. தொ. ச. காங்கிரஸ் தமிழ்நாட்டுக் கிளையின் காரியதரிசி பதவியிலிருந்து விலகிவிடும்படி வற்புறுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வரும் தேர்தலில் தொழிலாளர்கள் காங்கிரஸ்மகாசபையையே ஆதரித்து அமோகவெற்றிதேடிக் கொடுக்க வேண்டுமாய்க்கேட்டுக் கொள்வதுடன் உழைப்பவனுக்கே உலகம் சொந்தம் என்ற உண்மையை உலகத்திற்கு எடுத்துக்கூறிவரும் உத்தமத் தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து முதலாளி - தொழிலாளி ஆண்டான் - அடிமைஎன்ற பாகுபாடற்ற சமதர்ம சமுதாயத்தைஅமைக்க ஏற்றதொரு வாய்ப்பை தமிழகத்தொழிலுலகம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

குருவி ஜோசியம்.

இந்த வாரம் குருவி நமது தாலூக்காவிலும் பொதுவாகஜில்லாவிலும் காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு எந்த மாதிரியான ஆதரவு, எதிர்ப்புஇருக்கிறதுஎன்பதை ஆராய்த்தொடங்கிஉள்ளது. யாராயிருந்தாலும் விருப்பு வெறுப்பின்றி உண்மையைபட்டவர்த்தனமாகக் குருவி சொல்லும். அதனல் யாரேனும் சங்கட்ப்பட்டுக் கொண்டால் அதைப்பற்றி குருவிக்குக் கவலை இல்லை. பொதுவாகச்சென்றதடவை எம் எல். ஏ. யாக இருந்தவர்களிடம் மக்களுக்குப்பெரிதும் அதிருப்தியிருக்கிறது. அவர்கள் மக்கள் நலனை, விவசாயி தொழிலாளியின் குறைகளைகவனிக்கவில்லை சுயநலமே பிரதானமாகக் கொண்டிருந்தார்களேயொழிய ஏழைகளின் க்ஷேமயோக்க ஏதும்செய்யவில்லை. அதிகாரிகளிடம் சிபார்சுக்கும் பர்மிட்டுக்கும் தங்கள் அந்தஸ்தை உயர்த்தவும் பாடுபட்டனரே ஒழிய மக்கள் நலனில் அக்கரை கொள்ளவில்லை என்ற எண்ணம் பலமாகயிருக்கிறது இந்த நிலையில் இப்போது புதிதாக நிற்கும் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் அந்த எம். எல். ஏக்களை கூட அழைத்துச்சென்றால் அவர்கள் மீதுள்ள அதிருப்தி இவர்கள்மீதும் திரும்புகிறது. சென்றகாலத்தில் காங்கிரஸின்பேரால் சிலர் கதர்ஜிப்பாக்களைமாட்டிக்கொண்டு செய்த அக்கிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல. லஞ்சமே உருவாய் அமைந்தவர்கள். மகாதேசபக்தர்கள்போல் முன்னுக்கு வந்துவிடுகின்றனர், இவர்கள்வேலை அதிகாரிகளிடம்சிபார்சு, மந்திரிகளிடம் காவடி, ஊழல்புரிவதன்மூலம் தங்கள் அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளும்ஜிப்பாபேர்வழிகள்பலருண்டு இவர்களைப்பற்றி மக்கள் மிகவும் கேவலமாய் நினைக்கிறார்கள் இவர்களால் காங்கிரஸிற்கே கெட்டபேர் ஏற்பட்டுள்ளது. இப்பேர்வழிகளை இப்போதைய அபேக்ஷகர்கள் கூட அழைத்துச்சென்றால் கிடைக்கக்கூடிய வோட்டும் கிடைக்காது, அபேக்ஷகர்களைப்பொறுத்தவரை எல்லாருடைய ஆதரவும் அவசியம்தான். மக்களின் அதிருப்திக்கு ஆளான ஜிப்பாக்களை செல்வாக்காசுகளைக்கூட அழைத்துச் சென்று நீங்களும் கெட்டபெயருக்கு ஆளாகவேண்டாமென்று குருவி ஜோசியம்சொல்லுகிறது.

தேர்தல் மேடை.

மக்களின், ஆதரவு ஸ்ரீ மகாலிங்கத்திற்கு

பொள்ளாச்சிடவுன் தொகுதிக்கு காங்கிரஸ் அபேக்ஷகரான ஸ்ரீ என். மகாலிங்கம் தனதுதேர்தல் அலுவல்களை ஆரம்பித்துள்ளார். டவுனில் கூடுமானவரை எல்லாவீடுகளுக்கும்சென்று வாக்காளர்களை நேரில்பார்க்க திட்டமிட்டுள்ளார் தாலூக்காவிலும் எல்லா கிராமங்களிலும் நேரடியாக தொடர்புகொண்டு வாக்காளர்களிடம் நேரடியாகதொடர்பு வைத்து வேலைசெய்கிறார். நல்லஆதரவு உண்டு. படித்தவர், சகலவசதியுமுள்ளவர். சேவையில்ஆர்வமிக்கவர் இவர் எம். எல். ஏ. யாக வருவதைக்குறித்து மக்களுக்கு பெருமகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது அபரிமிதமான ஆதரவுடன் பெருவாரியான. வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படுவார் என காங்கிரஸ் ஊழியர்கள் எதிர்பார்க்கின்றனர், நகர் தாலூக்கா காங்கிரஸ்கமிட்டிகள் திட்டமிட்டு காங்கிரஸின் வெற்றிக்காகநல்லமுறையில்சேவை செய்ய ஏற்பாடுசெய்துவருகின்றனர். பொதுவாக நம் தாலூக்காவில் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் வெற்றி நிச்சயம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேயர்களே, இப்பகுதியில் நம் ஜில்லா காங்கிரஸ் அபேக்ஷகர்கள்செய்யவேண்டியதென்ன என்பதை சுருக்கமாக எழுதியனுப்பவும்.

(முதல்பக்கம் தொடர்ச்சி)

ன் வருத்தப்படுகிறார். முடிந்தவரை ஊழியர்களுக்கு இடம்கொடுத்துள்ளார். தேர்தலில் காங்கிரஸின் முழுவெற்றிக்கு திட்டமிட்டு வேலைசெய்துவருகிறார். இவரின் தலைமையில் நாடுநலம்பெற சமூகப்பொருளாதார விடுதலைபெற்று நாட்டுமக்கள் நல்வாழ்வு வாழ தீபாவளி தினத்தில் காங்கிரஸ் ஊழியர்கள் உறுதிகொள்வார்களாக.

செய்திகள்.

கட்டபொம்மன் தினம்.

21-ல் ஞாயிறு மாலை 7-மணிக்கு தேர்நிலை வெளியில் நகர தமிழரசுக் கழகத்தினரால் ஷ வீரனின் நினைவாக ஸ்ரீ பைந்தமிழன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் இளங்கதிர், கோவை போ. குருசாமி, தேவராசன், தி. கந்தசாமி ஆகியோர்கள்சொற்பொழிவாற்றினர்கள். இரா. சுப்ரமணியம் நன்றி கூறினர்.

சின்னம்பாளையம்.

21–ல் ஞாயிறு காலை 10 மணிக்கு சின்னம்பாளையம் இளைஞர் காங்கிரஸ்கமிட்டிக்கூட்டம் உப-தலைவர் ஸ்ரீ பி. காளியப்பன் தலைமையில் நடைபெற்றது. அங்கத்தினர்களைக் கொண்டு நாடகம் ஒன்று நடிப்பதெனவும், அதற்கு இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி அ. பாசித் எழுதிய "சகோதரி" என்ற சமூக தேசிய நாடகத்தை நடிப்பதெனவும் மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றிய பின்னர், காலஞ்சென்ற பாக்கிஸ்தான் பிரதமர் ஜனாப் லியாகத் அலிகான் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும்பொருட்டு 2-நிமிடம் மௌனப்பிரார்த்தனை செய்தனர்.

கோவை இளைஞர் காங்கிரஸ்.

17–ந் தேதி புதன் பிற்பகல் 3–மணிக்கு அதன் காரியாலயத்தில் தலைவர் ஸ்ரீ நா மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது முதலில் தலைவர் தயாரித்த விரிவான விவசாயம், தொழில்ஆகிய இரண்டு திட்டங்களை காரியதரிசி ஸ்ரீ கே. ராஜகோபால் அவர்கள் படித்து விளக்கிக்காட்டியபின்னர் நீண்டநேரவிவாதம் நடைபெற்ற பின், அதன் முடிவை அடுத்த கூட்டத்தில் அங்கத்தினர்கள் தனித்தனியே ஆலோசனைசெய்து தெரிவிப்பதென முடிவுசெய்யப்பட்டது. வரும் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்காக ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும் என்றும், பிற்போக்கு சக்திகளின்எதிர்ப்பைக்கண்டு அஞ்சக்கூடா தென்றும் ஜில்லா இளைஞர் காங்கிரஸிற்கு ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் வேண்டிய சகல உதவிகளையும் செய்வதாக ஸ்ரீ வி. சி. பழனிசாமிக்கவுண்டர் கூறினர், இளைஞர் காங்கிரஸ் முற்போக்கான கொள்கைகளை மக்கள்வரவேற்கின்றனர் என்றும் அதற்காக தீவிரமாக ஒவ்வொரு கிளையும் உடனடியாக பிரசாரம்செய்யவேண்டுமென்று காரியதரிசி ஸ்ரீ ராஜகோபால் கூறினர். கடைசியாக லியாகத்அலிகான் மரணத்தைக்குறித்து அனுதாபம் தெரிவிக்கும்பொருட்டு அனைவரும் 2-நிமிடம் எழுந்துநின்று மௌனபிரார்த்தனைசெய்தனர். கடைசியில் தேநீர் விருந்துடன் காரியதரிசி நன்றிகூற கூட்டம் சிறப்பாக முடிவுற்றது.

ஆனைமலையில் திருட்டு.

16-ம் தேதி செவ்வாய் காலை ஆனைமலை பஸ் நிலையத்தில் வேட்டக்காரன்புதூர் ஸ்ரீ அயில செட்டியாருக்கு சொந்தமான சுமார் ரூ 1360 பெருமான தங்க நகைகள் திருட்டுப்போனதை பொள்ளாச்சி டவுன் போலீஸாரின் தீவிர முயற்சியினால் அன்றிரவே 8-30 மணிசுமாருக்கு நம் நகர ரயில்வேஸ்டேஷனில் எதிரியை கண்டுபிடித்து சப்மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்படுத்திய பின்னர் எதிரியை ரிமாண்டுக்கு அனுப்பினர். களவு போன நகைகளும் கைப்பற்றப்பட்டன.

வாக்காளர்களின் ஜாபிதா.

பொள்ளாச்சி பார்லிமெண்டரி தொகுதியின் வாக்காளர்களின் இறுதியான ஜாபிதா அக்டோபர் 12-ம் தேதியிலிருந்து விளம்பரப்படுத்தப்பட்டிருப்பதாக நம் நகர சப்கலெக்டர் ஸ்ரீ எஸ். விஸ்வநாதன் ஐ. ஏ. எஸ். அவர்கள் நமக்குத் தெரிவித்துள்ளனர்.

'மூவர் டிப்போ
பழனியப்பகவுண்டர் வீதி,
பொள்ளாச்சி.

எங்கள் விறகு டிப்போவி[ல்] அசல் வெள்ள நாகன் வி[ற]...டன் கணக்கிலும், லாரியாகவு[ம்] குறைந்த விலைக்குக் கொடுக்[கப்]படும்.

P. V. நாச்சிமுத்து முதலியா[ர்]
மானேஜர்.

காங்கிரஸ் ஊழியர் அனுதாபிகளுக்கு

வேண்டுகோள்:

நடக்கவிருக்கும் சட்டசபை, மக்[கள்] சபை தேர்தலை முன்னிட்டு, ஒரு பயி[ற்சி] முகாமும்; தொண்டர்படையும்ஏற்படு[த்தி] பயிற்சி கொடுக்க உத்தேசித்திருப்பத[ால்] ஷ முகாம்களில் கலந்துசெயலாற்றவி[ரு]ப்பமுள்ளவர்கள் (தங்கள் முழு விவ[ரங்]களுடன் படிப்பு, வயது, இதர அம்[சங்]கள்) தாலூக்கா நகர காங்கிரஸ் கமிட்[டிக]ளுக்கு எழுதி இம்மாதம் 30-ம் தே[திக்]குள் பதிவுசெய்து கொள்ளவேண்டும[ாய்] கேட்டுக்கொள்ளுகிறோம். முன்கூட்டி[யே] பதிவுசெய்து கொள்ளாதவர்கள் கண்[டி]பாக முகாம்களில் கலந்துகொள்ள அ[னு]மதிக்கப்படமாட்டார்கள் என்பதையும்[அ]றிவித்துக்கொள்ளுகிறோம்.

எம். ராமசாமிக் கவுடர்,
கே, எம். கோவிந்தசாமிக்கவுண்டா[ர்]
தலைவர்கள்,
நகர, தாலூக்கா காங்கிரஸ்கமிட்[டி]
பொள்ளாச்சி.

குள்ளக்காபாளையம்
நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம்
லிமிடெட், (K. 1060.)

213, மார்க்கட் ரோடு, பொள்ளாச்சி.

முக்கிய அறிவிப்பு.

எங்களிடம் 60, 80 நெ. கெட்டிச்சாயம் நூல்களைக்கொண்டு தயார்செய்த சேலைகள் உத்திரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கப்படும். 40, 20 26 வெள்ளைரக துப்பட்டாக்களும், வேஷ்டிகளும், துண்டுகளும், தொட்டல் ரட்[டு]களும் கிடைக்கும். அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்யவேண்டுமாய் கேட்டு கொள்ளப்படுகிறது.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்

தீபாவளிப் பரிசு

இவ்வருடத்திய அதி உன்னதத் தமிழ்படம்,

நேஷனல் புரடெக்ஷன்ஸ்,

சிங்காரி.

லலிதா — பத்மினி ராகினி, சகஸ்ரநாமம்,

டி. ஆர். ராமச்சந்திரன்

மற்றும் பலர் நடிப்பது.

டைரெக்ஷன்: T. R. ரகுநாத்.

கோவை, நீலகிரி ஜில்லா உரிமையாளர்:—
கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,
ராஜ வீதி, கோயமுத்தூர்.

போன் நெம்பர். 63

கிருபா ஜுவல்லரி மார்ட்
Pro: S. G. சந்தானகோபாலன் செட்டியார்
ESTD. 1938
பொள்ளாச்சி

உத்திரவாதத்துடன் பவுன் நகைகளும்,
வெள்ளிப்பாத்திரங்களும் கிடைக்குமிடம்

குயிலின் குரல் இனிமையானது!
ஆனால் அதைவிட இனிமையானது

பல்லடம்
குயில் மார்க் பீடிகள்

காரம், மணம், குணம் ஒருங்கே அமையப் பெற்ற

குயில் மார்க் பீடிகள்

எங்கும் கிடைக்கும்.

Prop. P. A. ரஹீம் சாயபு,
பல்லடம்

ஏஜண்டு:
A. K. யாகூப் சாயபு, பொள்ளாச்சி.

'தேர்தலும் பத்திரிகைகளின் கடமையும்'

நமது நாடு குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டுசுமார் 20-மாதங்களாகிறது. இதற்குள் பல்வேறு சட்டங்களை இயற்றியும் நாட்டில் ஜனநாயகம், தழைத்தோங்க வேண்டுமென்ற எண்ணத்திலும, உலகில் யுத்தமேகங்கள் மோதிக்கொண்டிருக்கும் இந்தவேளையிலும், நமது நாட்டில்பொதுத்தேர்தலை, நடத்தியே ஆகவேண்டுமென்றுநமது பாரத நாட்டின் பிரதமர் நேருஜி அவர்கள் உறுதிபூண்டு, அதற்கெனதனித்தனியாகவும், மாகாணங்களிலும், மத்தியிலும் தேர்தல் அதிகாரிகளை நியமித்தும் தேர்தலை நடத்துவதற்கு ஓய்வொழிவின்றிவேலைசெய்து வருகிறார் என்பதையாரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஜனநாயக அரசாங்கங்களில் அங்கு வாழும் மக்களுக்கு பல்வேறு உரிமைகள் கொடுக்கப்படுகின்றன. அவைகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று சிவில் உரிமை, மற்றொன்று அரசியல் உரிமை. அரசியல் உரிமைகளில் முதன்மையானதும், மிக, மிக, முக்கியத்துவம் வாய்ந்ததும். மக்களின், எண்ணங்களை பிரதிபலித்துக்காட்ட ஏற்படுத்தப்பட்ட ஆயுதம் தான் (வோட்) வாக்கு சுதந்திரம். இந்த வோட்டின் மூலமாகத்தான் தேர்தல்களில், கலந்துகொண்டு பொரும்பாலான மக்களின், நல்வாழ்வுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும், ஏற்ற ஒருஆட்சிமுறையினை, அமைக்கப்பாடுபட வேண்டும். அந்தப்படியானதேர்தல்களின்மூலமாகத்தான் மக்களின் உண்மையான. ஆட்சியை மலரவைக்க முடியும் மக்களால் வோட்டளிக்கப்பட்டு. தேர்தல்களில்மக்களின் பிரதிநிதி களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் எண்ணங்களை தேர்தல்கள் மூலம் ஆட்சிக்குக்கொண்டுவர முயற்சிக்கும். ஆரசாட்சியைதான் — ஜனநாயக ஆட்சி. ஜனநாயக அரசியலென்பது தேர்தல்களின் தன்மை என்ன என்பதை நாம் சிறிது ஆராய்வோமானால், ஜனநாயகத்தின் அடிப்படையான, நோக்கம், யாதெனில், நாட்டு மக்களில், ஏற்றத்தாழ்வின்றியும் சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடில்லாமல் பாரதியாரின் கவிதையைப்போல சரிநிகர் சமானமாக வாழ்வதே, ஜனநாயகமாகும், இந்த ஜனநாயகம் என்பது நாட்டில் வாழுகின்றன வயதுவந்த மக்களின் முடிவான எண்ணங்களுக்குட்பட்டு அவர்களின் மேல்பார்வைக்குக் கட்டுப்பட்டு, அரசாட்சியை நடத்தவரும் ஜனப்பிரதிநிதிகளை நேரடியான தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுப்பதும், அரசாங்கப் பிரரேபணைகளை ஏற்றுக்கொள்வதிலும் நிராகரிப்பதிலும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளுக்குத் தான் பூரண அதிகாரமுண்டு.

நம் நாட்டில் சட்டசபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்களாக நிற்பதற்கும், அவர்களைத்தேர்ந்தெடுப்பதற்கும் 21-வயதிற்குமேற்பட்டவர்கள், எந்த மதத்தினர் எந்த ஜாதியினர், எந்த இனத்தவர், ஆண், பெண், ஏழை, பணக்காரன் என்றபாகுபாடின்றி, எல்லோருக்கும், பாரத அரசாங்கம் உரிமைச் சாசனம் சட்ட மூலம் எழுதிவைத்து இருக்கிறது.

பல ஆண்டுகள் நமது நாட்டில் நடந்தபோராட்டங்களுக்குப் பின் விடுதலையடைந்த நமது — பாரதநாட்டில் முதன் முதலாக தேர்தல்வருகிறது. இந்ததேர்தல்நடத்துவதும் மிகவும்லேசானகாரியமே அல்ல. உலகமே இதுவரை நடத்தாத, ஏன்காணமுடியாத, இல்லை, இல்லை, எந்தநாடும் நினைத்துக்கூடப் பார்க்காத அளவில் சுமார் 18-கோடி மக்கள் இந்தத்தேர்தலில் நேரடியாகக் கலந்து கொள்ளுகிறார்கள். இந்தப்பெருமையை உண்மையாகவே யாரையேனும் சேரவேண்டுமென்றால் அண்ணல் காந்திஜியைச் சேர்ந்த
தென்றே துணிந்து கூறலாம்.

தேர்தல் என்பது இரண்டுபக்கங்க
ளிலும் கூர்மையாகத்தீட்டப்பட்ட பதமு
ள்ள ஒரு ஆயுதம். இந்தத்தேர்தலென்ற
ஆயுதத்தின் மூலம் கெட்டவைகளை வெ
ட்டிவீழ்த்தவும் முடியும் நல்லவைகளை
நாசமாக்கவும் முடியும். தேர்தல்களில்,
மக்கள், எந்தவிதமாகவும், நடக்கஉரிமை
உண்டு என்றே நம் கையில் கொடுக்கப்ப
ட்ட ஆயுதம்தான் தேர்தலிலும், வோட்
டுரிமையுமாகும். என்றாலும், இந்தத்தேர்
தலில் நாட்டுமக்களின் நலம் கருதுபவ
ரும், தன்னலம் இல்லாதவரும் நன்மை
யையே நாடும் எண்ணங்களையே
கொண்டவர்களையே தேர்த
லில் மக்கள் அபேக்ஷகர்களாகத்தேர்ந்தெ
டுக்கவேண்டும். நாம் ஆய்ந்து ஆராய்ந்து,
அறியாமல் கொடுமையாளர்களை தேர்தெ
டுத்து விட்டால் அது நம் நாட்டையும்
நாட்டு மக்களுக்கு பெரும் கேட்டையும்
விளைவிப்பதற்கு உதவி செய்தவர்களாக
நம்மை நாமே ஆக்கிக்கொள்ளுவோம். ஆ
தலின் தேர்தலில் நிற்கும் அபேக்ஷகரை
யும் அபேக்ஷகரின் தகுதி திறமை யோக்
கியம் பொறுப்பு இவற்றிற்கெல்லாம் மே
லாக ஒழுக்கத்தையும் ஊன்றிக்கவனித்து
தேர்ந்தெடுக்கவேண்டியது. இன்றியமை
யாததாவதுடன் கடமையும் ஆகும். மக்க
ளுக்கு நன்மைசெய்யப்போகிறேன்என்று
பலர் இன்று புதிதாக தேர்தல் காலங்க
ளில் மட்டும் வருவார்கள். அவர்கள் விஷ
யத்தில் மக்கள் மிகவும் ஜாக்கிரதையாக
இருக்கவேண்டும் என்பதை எல்லோரும்
ஏற்றுக்கொள்வார்கள்.

தேர்தல்களில் வகுப்புவாதிகளும்,மு
லாளிகளும் சமூகத்தின் போாலும், ஜாதி
ன்போாலும் புகுந்து, நாட்டுமக்களின் வாழ்
க்கையையும்முன்னேற்றத்தையும் தடுக்கசதி
செய்வார்கள். அப்படிப்பட்டவர்களின் எண்
ணிக்கை மிக மிக சொற்பம். அவர்களை வி
ட்டுவதென்பதும், சுலபமான காரியம். இந்த
முறையில் பாமரமக்கள் மிகவும் கவனம்செலு
த்தி முதலாளிகளை எதிர்க்க வகுப்பு வாதி
களை ஓட்ட, நமது நாட்டைப்பாதுகாக்க ஏற்
றத் தாழ்வின்றி சுரண்டலற்ற மக்கள் சமு
தாயத்தையும் ஜனநாயகத்தையும் அமைக்க
மக்கள் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டிய
நேரம் தான் தேர்தல். நேரம் இந்த நேரத்தி
ல்தான் அன்பும் அனுதாபமும் ஏற்றத்தாழ்
வற்ற மனப்பான்மையும் ஆற்று அதற்கான
வேலைகளையே நடைமுறையில் செய்து மக்க
ளின் அன்பையும் ஆதரவையும் ஒருங்கே பெ
ற்று நிர்வாகத் திறமையுள்ள அறிவாளிகளை
யே மக்களின் பிரதிநிதிகளாக மத்திய, மாகா
ணசட்டசபைகளுக்கு தேர்ந்தெடுத்து அனு

வதற்கு மக்கள்எல்லோரும் ஒன்றுசேர் து ஒரே குரலாக அபிப்பிராயம் கொண் தேர்ந்தெடுக்க வேண்டியது மக்களின் றுக்கமுடியாத கடமையாகும். தேர்தல் ண்பதற்கும் அதுதான் எடுத்துக்காட் ாக இருக்கவும் முடியும்.

நம்முடைய எதிர்காலமும் நாட்டின் திர்காலத்தையும், நிர்ணயிக்கும் பொறு பு நாம் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதி திகள்கையில் இருக்கிறது நாம்தேர்தல் லம் சட்டசபைக்கு அனுப்பும்பிரதிநிதி ள் தான் நாட்டிற்குகந்த நல்ல காரியங் ளை சமூகப், பொருளாதார விடுதலையை ம், மக்கள் ஏற்றத்தாழ்வைப்போக்கவும் ட்டில் உள்ள அனைவருக்கும்கல்வி அறி வஉண்டாக்கவும், மக்கள் சுபீட்சமாக ம், சுதந்திரமாகவும், வாழவும் சட்டதி ங்களை ஏற்படுத்துவார்கள் மக்களின் பிக்கைக்குகந்தவர்களை மக்கள் அன்ரு வாழ்க்கையில் அனுபவிக்கும் சுகதுக்க ளை நன்ருக அறிந்தவர்களை மக்களிடம் ரடியான தொடர்பு கொண்டுள்ளவர் ளைத் தேர்தல் மூலம்: நாம் தேர்ந்தெடுக் க்கடமைப்பட்டுள்ளோம்.

தேர்தல்களில் பலவகையான தேர் ல்கள் உண்டு. ஆனல் நம் நாட்டில் நட கவிருக்கும் தேர்தலினல்தான் உலகில் னநாட்டு தேர்தல் எப்படி இருக்குமென் தை உலகிலுள்ள அத்தனை நாடுகளும் திர்பார்த்து இருக்கிறது. அதனல் நம் ட்டில் நடக்கவிருக்கும் தேர்தலை விளை ட்டாகவோ பொழுது போக்குக்காக யாரும் கருதிவிட முடியாது. ஏனெ ல் மக்களின் ஜீவாதாரமான கொள்கை ளையும் திட்டங்களையும் வழிவகுத்து டைமுறைக்குக் கொண்டுவரும் சட்டங் ளை இயற்ற ஏற்ற திறன் உள்ளவர்கள் ன் தேர்தலில் கலந்து கொள்ளவேண் ம் என்ற படிப்பினையை இந்தத்தேர்தல் லம் எடுத்துக் காட்டுவோமேயானல் திர்காலத்தில் மக்கள் அடையும்நன்மை ள் யாவும்இந்தத்தேர்தலில் கலந்துகொ ட ஒவ்வொருவரையும் சாரும். தேர்த ல் கலந்து சட்டசபைகளுக்கும் மக்கள் பைகளுக்கும் செல்லுபவர்கள் நாட்டின் பொருளாதாரத்தில் உள்ள சீர்கேடுகளை சப்பனிட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் ரும் வகையில் தொழில்களையும் விவ ங்களையும் அபிவிருத்திசெய்ய இறுதி ரயில் செயலாற்ற திறம்படைத்தவர் ளாக இருப்பதுடன் மக்களின் மனே ல் அறிந்து கூட்டு விவசாயம் ஏற்படுத் வேண்டுமென்ருலும் தொழில்கள் பொ துச் சொத்தாக்க வேண்டுமென்ருலும் அதற்கு ஆக்கமளிக்க முற்படவேண்டுமே யல்லாது தடுப்பதற்காக இருக்ககூடாது அப்படிப்பட்ட மனேநிலை இப்பொழுது இல்லை என்ருலும் அந்த அளவுக்குமனே நிலையை மாற்றிக்கொள்ளத் தயங்கக்கூடா து அப்படிப்பட்டவர்களைத்தேர்ந்தெடுப்ப தில் மக்களும் மறந்து விடக்கூடாது.

பத்திரிகைகளின் கடமை

நம் நாட்டுப் பத்திரிகைகளில் பல வகையுண்டு ஒன்று முதலாளிகளால் தங்களுக்கே விளம்பரம் செய்து கொள் வது. இரண்டு முதலாளித்வம் இந்தநாட் டில் வளரவேண்டுமென்பது மற்ருென்று மூன்ருவது தொழிலாளர்களின் நன்மை யையே நாட்டம் கொண்டது. நாலாவது பணம் சம்பாதிப்பதையே பத்திரிகைத் தொழிலாகக்கொண்டது. ஐந்து சமூகத் தைமுன்னேற்றமடையச் செய்வது. ஆறு தனிப்பட்டவரின் தொழில் பற்றியது. ஏழு அரசாங்கத்தாரால் அரசாங்க அலு வல்களையே குறிக்கோளாகக் கொண்டது எட்டு அரசியல் கட்சிகளையேவளர்ப்பது. ஒன்பது சுகாதாரமாக இருப்பதையே எடுத்துக்காட்டுவது. பத்து மக்களின் நல்வாழ்வுக்காகவே பாடுபடுவது, இன் னும் ஆபாசங்களை எழுதுவதே தொழி லாகக் கொண்டது போன்ற இன்னும் பலப்பல இந்த நாட்டில் இருந்து வருகி ன்றன என்ருலும் மக்களின் பொதுநலன் கருதி நல்வாழ்விற்கு ஏற்றதொருபாதை யைவழிவகுத்துக் கொடுத்து நாட்டின் பொருளாதார சமூக அறிவியல்அரசியல் போன்றவைகளை வளர்க்கும் பத்திரிகை நம்நாட்டில் மிகவும் குறைவுஎன்ருல் அது மிகப்படுத்திக்கூறுவதாகக் கொள்ளமுடி யாதென்றே நம்புகிறேன்.

பத்திரிகை என்ருல் பாகுபாடின்றி பாரபட்சமின்றி பத்திரிகை தர்மமாகியவ ற்றைக்கடைப்பிடித்து எழுதுவதைப் பல பத்திரிகைகள் இன்று மறந்துவிட்டன. காசுக்காக எதைவேண்டுமானுலும் எழுது வதென்ற இழிநிலைக்கு சிலபத்திரிகைகள் வந்துவிட்டன கண்டு வருந்தாமலிருக்க முடியவில்லை இந்த நிலை இப்படியே நீடி த்தால் நாட்டிற்கே பெரும்கெடுதல்தான் விளையும் என்பதை யாரும் மறக்கமுடி யாது.

மிகப்பெரிய தேர்தலில் நமதுபாரத நாட்டில் சமீபத்தில் நடக்கவிருக்கிறது: தேர்தலில் மக்கள் எவ்வாறு நடந்துகொ ள்ளவேண்டும் தேர்தல் எப்படி எப்படி நடத்தப்படவேண்டும் தேர்தல் என்ருல் என்ன? மக்கள் ஏன் தேர்தலில் கலந்து கொள்ளவேண்டும்,

(7-ம் பக்கம் பார்க்கவும்)

உழுதுண்டு வாழ்வானே வாழ்வான்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வர். (வள்ளுவர்.)
P. S. G.
இந்தியரின் மூலதனம்

இந்தியரின் உழைப்பு.
P. S. G. எலக்ட்ரிக் மோட்டார் பம்புகளின் முக்கிய அம்சங்கள்.
- குறைந்த செலவில் அதிக தண்ணீர், ● நிகரற்ற சேவை.
- நீடித்த உழைப்பு, ● நிசப்தமான ஓட்டம்.
P. S. G. உற்பத்தி பொருள்களின் விநியோகஸ்தர்:—
C. N. சாமி என்ஜினியரிங் ஒர்க்ஸ்,
ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி.
குறிப்பு:- எல்லாவிதமான எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டுகள் ஆயில் என்ஜின்கள் மோட்டார் ரீவைண்டிங்கள் குறித்த காலத்தில் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.
உரிமையாளர்:— C. N. நாராயணசாமி.

வோட் என்றால் என்ன, என்பது போன்றவைகளை நான் கண்டவரையிலும் எந்தப்பத்திரிகையும், இன்றையவரை எடுத்துக்கூற தயங்குகின்றன. நம் நாட்டில் படித்தவர்கள் 100-க்கு 15-பேர்கள்தான் இருக்கின்றார்கள் என்பதை தெரிந்தும் இன்றளவும் இதுபற்றி எடுத்துச்சொல்லாமலிருப்பது ஆச்சரியத்தை விளைப்பதோடு நம் நாட்டின் மக்கள் மனோநிலையும் எந்த அளவிலிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

எனவே இனிமேலேனும் தேர்தலும் மக்கள் கடமையும் என்ற தலைப்புடனே, அல்லது தேர்தலும் பிற்காலமும் என்றோ தேர்தலைக்குறிக்கும் ஒரு தலைப்பை தினசரி பத்திரிகைகளும், வார ஏடுகளும், மாத இதழ்களும் வெளியிடவேண்டுமெனமக்கள் வற்புறுத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்வதுடன் பத்திரிகைகளுக்கும் என் அபிப்பிராயங்களை தெரியப்படுத்தி வேண்டுவன செய்யமுயற்சிக்கிறேன். கட்சிப்பத்திரிகைகள் தங்கள் கட்சிக்காகவே உழைப்பதென்று முடிவுசெய்து கொள்வது தவறு. மற்றகட்சிகளில் உள்ளகுறைகளை எடுத்துக் கூறுவதிலும் யாருக்கும் ஆக்ஷேபணைகள் இருக்க முடியாது.

பத்திரிகை ஆசிரியர்களும் கூடுமானவரை தேர்தல்களில் நேர்மையாளர்களையும் அறிவாளிகளையும் அந்தந்த பிரதேச மக்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதென்ற முடிவுக்கு வந்தால்பொதுமக்கள் பத்திரிகையின்பால் கொண்டுள்ள நல்லெண்ணம் மீண்டும் பலப்படும் என்று நான் நம்புகிறேன். அபேக்ஷகர்களின் தாரதம்மியங்களையும் குணதிசயங்களையும்விரிவாகயெடுத்துக்கூறி நேர்மையும் திறமையும் உள்ளவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்து எழுதுவதுடன் பணத்தால் எதையும் சாதித்துவிடலாம் என்றவர்கள், தொழிலாளர் நலனில் அக்கரை இல்லாதவர்கள், விவசாயத் தொழிலாளர்களின்பால் கருணைஇல்லாதவர்கள் போன்றோர்களை கண்டித்தும் எழுதவேண்டும். நமது தலைவர் பண்டிதநேருஜிசொன்னதுபோல் ஊமைகளைப் பற்றியும் அறிவுத்திறன் இல்லாதவர்களைப்பற்றியும் கூடாதென்று கூசாமல் சொல்லிவிடவேண்டும். எனினும் அவரிடம் உள்ள குறைகளை பகிரங்கப்படுத்த பத்திரிகைகள் பின்வாங்கக்கூடாது.

பெரும்பான்மையான பத்திரிகைகள் இன்றுபணமூட்டைகளின் கையில் இருப்பதுகள். இதனாலும் ஓரளவு உண்மையை எடுத்துக்கூற இயலாத நிலையில் உள்ள சிலமுற்போக்கு எழுத்தாளர்களும் இருந்துவருகிறார்கள் என்பதை நினைக்கும்தோறும் நெஞ்சம் குமுறத்தான் செய்கிறது. இந்த நிலைமாறவேண்டுமானால் ஆங்காங்கு நகரங்கள் தோறும் சிறு சிறு பத்திரிகைகள் ஆரம்பிக்க பொதுமக்கள் ஊக்கமளிக்கவேண்டும். ஆரம்பித்து பலபத்திரிகைகள் நடத்த முடியாத நிலையேற்பட்டு நிறுத்தியும் விட்டுவிட்டார்கள். அவைகளை எல்லாம் மீண்டும் ஆரம்பிக்கஊக்கமளிக்கவேண்டுகிறேன். பத்திரிகைகள்தான்நாட்டையும் நாட்டு மக்களின் உண்மையாகபிரதிபிம்பமாக விளங்கவேண்டும் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைமட்டும்கூற விரும்புகிறேன். இங்கிலாந்தை எடுத்துக் கொண்டால் ஒரு மணி நேரத்திற்கொரு தடவை பல லட்சம் பத்திரிகைகள் வெளிவந்து விற்பனையாகின்றன. என்றால்அந்தநாட்டில் மக்கள்பண்புக்கும் பத்திரிகை உலகிற்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பதற்குஎடுத்துக்காட்டு, நம்நாட்டுநிலைக்கும் அதற்கும் மலைக்கும் மணலுக்குமுள்ள வித்தியாசம் தான் காணமுடிகிறது.

இன்றைய பத்திரிகைகள் கீழ்க்கண்டவைகளை கருத்தூன்றி கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகாரத்தாலோ பணத்திமிறினாலோ பகட்டான வாழ்க்கையினாலோ தேர்தல் முஸ்தீப்புகளில் இறங்கியுள்ளவர்களுக்கு இந்தத்தேர்தலில் சரியான படிப்பினையைக் கற்றுக்கொடுக்க பத்திரிகை உலகம் பயப்படக்கூடாது. பணத்தை அள்ளிவீசிவாக்காளர்களை விலைகொடுத்து வாங்கிவிடலாமென்று எண்ணுபவர்களையும் எதிர்த்து நிற்பவர்களையும் ஏலம் கோரிவிட நினைக்கும் எத்தர்களுக்கும் இந்தத் தேர்தலில் பத்திரிகைகள் சரியானபாடம் கற்பிக்கத் தயங்கக்கூடாது.

நடைபெறவிருக்கும் தேர்தலின்
ம்அமைக்கவிருக்கும் அரசாங்கம் பண
காரர்களிடமும் பதவி வேட்டைக்கார
ளிடமும் வகுப்புவாதிகளிடமும் சுயநல
கும்பலிடமும் கள்ளமார்க்கெட் சுயவ
ளிடமும் அகப்படாத நிலையை உண்டா
கவேண்டியது. இன்றைய தமிழகப்பத்
ரிகைகளின் தலையாய க[illegible]மையாகும்.

ஜெய் ஹிந்த்!

தேர்தலும் பட்திரிகைகளின்கடமை
யும் என்பதைப்பற்றி 19—10—51
மாலை 7-மணிக்கு நம் நகர ஒலிபரப்பி
நமது ஆசிரியர் ஸ்ரீ பி. எஸ். வேலுசா
அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மே
பட்ட ஆண், பெண்கள் E. S. L.
க்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்
மெட்ரிகுலேஷனுக்கும் 9-ம் வகுப்புவ
ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S.S.L.
இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்ட
உண்டு.
தலைவர்:– S. R. Chandran.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிர
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

'மூர்த்தி போர்டிங் & லாட்ஜிங்'
33, சத்திரம் வீதி; :–: பொள்ளாச்சி.

சுகாதார முறைப்படி தயார் செய்த சிற்றுண்டியும், சாப்பாடும்
இவைகளுக்குச் சிறந்த இடம்.

தங்குவதற்கு காற்றோட்டமுள்ள வசதியான ரூம்கள்
உண்டு.

போன் நெ. 53. தபால்பெட்டி நெ 25.

தீபாவளிக்குப் புதுத்தம்பதிகளுக்கு பரிசளிக்க

வேண்டுமா?

இதோ

ராமகிருஷ்ண ஜுவல்லரி மார்ட் பிராஞ்சுக்கு

விஜயம் செய்யுங்கள்!

N. B: நவநாகரீகமான வேலை
ப்பாடு அமைந்தசவரன்பொன்
கைகளும், வெள்ளி சாமான்
ளும் வாங்கி ஆனந்தியுங்கள்.
B. B. C. சீல் நகைகள்
எப்பொழுதும் சிறந்தவை.

ராமகிருஷ்ண
ஜுவல்லரி மார்ட்
பிராஞ்சு,
நெ. 37, 38.
கடைவீதி,
பொள்ளாச்சி.

Pro. B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

என்றால்!

யாருக்குத் தெரியாமல் இருக்கிறது?

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi